# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

OS.175 of 2020

Civil Case No :: Pw- 2

Name :: இசக்கியம்மாள்

Father's/Husband's Name :: முருகன்

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 26.03.2025.

**முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையில் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் இளநிலை உதவியாளராக பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பகராண்மையில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அங்கீகார கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அது சா.சா.ஆ-1 ஆகும். எங்கள் அலுவலகத்தில் புத்தகம் எண்.3 ஆவணம்எண் 27/1995 ல் ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது உயில் ஆவணமாகும். மகராசி அம்மாள் என்பவரால் பிறப்பிக்கப்பட்டதாக உள்ளது. எங்கள் அலுவலக ஆவணத்தின் படி மகராசி அம்மாள் எழுதி கொடுத்த உயிலில் இரண்டு நபர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். 1. அருணாச்சலம் த/பெ அனஞ்சபெருமாள் பிள்ளை, 10B, இல்லத்தார் வடக்கு தெரு, 2. ஆல்பர்ட் வல்தாரிஸ் த/பெ இருதயராஜ் , 10 பிரகர் வடக்கு தெரு, பேட்டை என்பதாகும். அடையாளம் காண்பித்தவர்கள் என்ற சாட்சியாக 1.

இ.கோபாலகிருஷ்ணன், த/பெ இசக்கி கோனார், 21, துர்க்கை அம்மன் கோவில் தெரு, பேட்டை. 2. பெருமாள் முதலியார், த/பெ வேலாயுத முதலியார், TPS தெரு, பேட்டை என்பதாகும். அந்த உயிலில் இரண்டு தபசில் சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட உயிலில் எங்களுடைய அலுவலக ஆவணத்தையும், சான்றிட்ட நகலையும் கொண்டுவந்துள்ளேன். அந்த உயிலின் சான்றிட்ட நகல் ( அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) சா.சா.ஆ.2 ஆகும்.

குறுக்கு விசாரணை

நான் எந்த வருடத்தில் இருந்து மேற்படி பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 03.12.2024 ம் தேதியில் இருந்து பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணை சார்பதிவாளருக்கு வந்தது என்றால் சரிதான். எனக்கு சாட்சியம் அளிக்க அங்கீகார கடிதம் கொடுத்துள்ளார்கள். உயிலை எழுதி வைத்த மகராசி அம்மாவை பற்றியோ மேற்படி உயிலை பற்றியோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி உயிலை எழுதி வைத்த மகராசி அம்மாள் பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் குடியிருந்து வரவில்லை என்றால் உயில் எழுதி கொடுக்கும் போது நான்குநேரியில் குடியிருந்து வந்தார். உயிலில் உள்ள சொத்து பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்டது அல்ல என்றால் நான்குநேரி சார்பதிவாளர் அலுவலக்திற்கு உட்பட்டது ஆகும். பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட சாட்சிகள் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்றால் இரண்டு சாட்சிகளும், இன்னாரென்று நிரூபித்த சாட்சிகளும் பேட்டை முகவரியை கொண்டுள்ளதாக ஆவணத்தில் துலங்குகிறது. உயிலின் படி உயிலில் ஆதாயம் பெறும் நபரின் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதில் என்னுடன் குடியிருந்து வரும் எனது ஏக குமாரர் நம்பி தாஸ் க்கும், முருகம்மாள் என்ற லெட்சுமிக்கும் முதலாம் தபசில் சொத்து பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளது. இரண்டாவது சொத்து பேட்டை துர்க்கை அம்மன் கோவில், மேலதெரு, கதவு எண்.21 ல் குடியிருந்து வரும் என்னுடைய பேத்தியும் மகராசி அவர்களின் பேத்தியும், லெட்சுமணன் அவர்களின் மனைவியுமான வேலம்மாள் என்ற வேணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உயில் பதிவு செய்யும்

சமயத்தில் மகராசி அம்மாளிடம் ஆவணத்தின் தன்மை குறித்து ஏதேனும் விசாரணை செய்ததாக ஆவணத்தில் துலங்குமா என்றால் எந்த குறிப்புகளும் இல்லை. மகராசி அம்மாள் எனக்கு நேரில் அறியப்பட்டவர் என்று பதிவாளர் மேற்குறிப்பு செய்துள்ளாரா என்றால் இல்லை. மகராசி அம்மாளின் அடையாளம் குறித்து ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் அவரது இடது கை ரேகை உள்ளதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.